**லிற்றோ காஸ் ரேமினல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் - 2021**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

லிற்றோ காஸ் ரேமினல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, ஏனைய நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினை விடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு

அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னால் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரி, ஆகஸ்ட் 2020 இல் பூச்சிய வட்டி விகிதத்தில் ரூ.9.753 மில்லியன் வாகனக் கடனைப் பெற்றுள்ளார், மேலும் அந்தக் கடனில் 50 சதவீதமான ரூ.4.876 மில்லியன் கம்பனியால் ஏற்கப்படும். எவ்வாறாயினும், பொதுத் திறைசேரியால் அந்த பதவியை மாற்றியதன் காரணமாக கடன் ஒப்பந்தத்தின் படி 5 வருட சேவையை அவர் பூர்த்தி செய்யாததால் கம்பனியின் 50% பங்கு உட்பட நிலுவையில் உள்ள மொத்த கடன் தொகை 20 ஆகஸ்ட் 2021 அன்று முன்னால் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரியால் செலுத்தப்பட்டது. | சபை ஒப்புதலின் படி முன்னாள் தலைவர், தலைவருக்கான சலுகைகளுக்கு அன்றி தலைமை நிர்வாக அதிகாரிக்கான சலுகைகளுக்கு மட்டுமே உரிமம் பெற்றிருந்தார். | தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி ஆகிய இரு முரண்பட்ட பாத்திரங்களைப் பிரிக்கவும் மேலும், ஊழியர் கடன் திட்டத்தை மதிப்பாய்வு செய்து கடன் தொகையை முழுமையாக மீட்டெடுக்கவும் மற்றும் வழங்கப்பட்ட ஊழியர் கடன்களுக்கு நியாயமான வட்டியை வசூலிக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது. |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பற்றிய குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (a.) 2018 யூலை 18 ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை எண்.03/2018 | சுற்றறிக்கையின் படி, எதிர்காலத்தில் பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெறாமல், சம்மந்தப்பட்ட அதிகார பீடங்கள் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதையும், அவர்களின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளை அதிகரிப்பதையும் தவிர்க்க வேண்டும். ஏற்பாடுகளுக்கு மாறாக கீழ்வருவன செய்யப்பட்டிருந்தது; | ஊழியர்களின் சம்பள வரம்புகள் மற்றும் படித் திட்டங்கள் கம்பனியின் அமைப்பு அகவிதியின் படி கம்பனியின் தலைவர் மற்றும் சபையால் அங்கீகரிக்கப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கிகாரத்தைப் பெறுவதற்கு மனித வளத்திற்கான எந்த நடைமுறையும் இல்லை. | சுற்றறிக்கையின் பந்தி II இன் படி, ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் அவர்களின் சம்பளம் மற்றும் படிகளை அதிகரிப்பதற்கும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கிகாரம் தேவைப்படும். கம்பனியின் செயல்பாடுகளை நிர்வகிப்பதில் கம்பனி அவ்வப்போது சம்பந்தப்பட்ட அதிகார பீடங்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை கடைபிடிக்க வேண்டும். |
| | (i.) பூச்சிய வட்டி விகிதத்தில் கம்பனியின் ஆறு அதிகாரிகளுக்கு ரூ. 34.93 மில்லியன் ஊழியர் வாகனக் கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கடன் தொகையில் ஐம்பது சதவீதம் ரூ. 17.46 மில்லியன் கம்பனி ஏற்க்கிறது. | கம்பனியால் பல திருத்தங்கள் மேற்க்கொள்ளப்பட்டதற்குப் பிறகு ஷெல் கேஸ் ரேமினல் லங்கா லிமிட்டட் ஆல் கார் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. தலைவர் அமைப்பு அகவிதியின் கீழ் ஒரு துணைக்குழுவை நியமித்திருக்கிறார். தற்போதுள்ள கார் கொள்கை மேம்படுத்துவதற்கு அவர்கள் பரிந்துரைத்துள்ளனர். | துணைக் குழுவின் உறுப்பினர்களும் ஊழியர் வாகனக் கடன் திட்டத்தின் பயனாளிகளாக இருந்தாலும் தலைவரால் நியமிக்கப்பட்டுள்ள துணைக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள முடியாது ஏனெனில் கருத்து வேற்றுமை அவதானிக்கப்பட்டிருந்தது. எனவே, ஊழியர் கடன் திட்டத்தை மீளாய்வு செய்யவும், கடன்தொகையை முழுமையாக வசூலிக்கவும் மற்றும் மற்ற அரச கம்பனிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டது போன்று நியாயமான வட்டியை வசூலிக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அறிவுறுத்தல்களை நாட முடியும். |

| | | | |
|---|---|---|---|
| (ii.) | ஆறு அதிகாரிகளுக்கான மாதாந்த வாகன படி ஆகஸ்ட் 2020 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 30 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.<br>புதிய மாதாந்த வாகனப் படி ரூபா.143,000 முதல் ரூபா.300,300 இற்கு இடைப்பட்ட வரம்பிற்குள் உள்ளது. | குழுவின் பரிந்துரைக்கேற்ப படிகள் செலுத்தப்பட்டது மற்றும் லிற்றோ காஸ் ரேமினல் லங்கா லிமிட்டட்டின் கார் கொள்கையானது கம்பனியின் இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. | பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை கம்பனி பின்பற்ற வேண்டும். மேலும், துணைக் குழுவின் உறுப்பினர்களும் ஊழியர் வாகனக் கடன் திட்டத்தின் பயனாளிகளாக இருந்தனர் அவர்களிடையில் கருத்து வேற்றுமை அவதானிக்கப்பட்டதால், துணைக் குழுவினால் மேற்க்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை ஏற்க முடியாது. |
| (iii.) | வேலை தொடர்பான வாகனக் கடன்களுக்குத் தகுதியற்ற அதிகாரிகளுக்கான மாதாந்த வாகனப் படி ஆகஸ்ட் 2020 நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.<br>புதிய மாதாந்த வாகனப் படி ரூபா.15,000 முதல் ரூபா.50,000 இற்கு இடைப்பட்ட வரம்பிற்குள் உள்ளது. | குழுவின் பரிந்துரைக்கேற்ப படிகள் செலுத்தப்பட்டது மற்றும் லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட்டின் கார் கொள்கையானது கம்பனியின் இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. | பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை கம்பனி பின்பற்ற வேண்டும் மற்றும் வாகன படிகளுக்கு உரிமை இல்லாத ஊழியர்களுக்கு வாகன படிகள் வழங்குவதைத் தவிர்க்க வேண்டும். |
| (iv.) | கம்பனியின் ஒவ்வொரு தனிநபருக்கும் 2020 டிசம்பர் 31 இல் வரையப்பட்ட சம்பளத்தின் மீது 5%-40% சந்தை சரிசெய்தலின் அடிப்படையில் சம்பளத் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. | ஒரு நடைமுறையாக கம்பனியின் ஊதியப் நன்மைகள் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி மற்றும் இயக்குனர்கள் சபை போன்றவற்றால் தீர்மானிக்கப்படுகிறது.<br>PWC ஆல் செய்யப்பட்ட ஊதியம் மற்றும் நன்மைகள் ஆய்வை செயல்படுத்துவதற்கான ஒரு சபை அங்கிகாரம் வழங்கப்பட்டது மற்றும் அனைத்து ஊழியர்களின் சம்பளமும் ஊதியக் குழு பரிந்துரைகளின்படி செயல்படுத்தப்பட்டது. | சம்பந்தப்பட்ட அதிகார பீடங்களால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் மாற்றங்களுக்கு ஏற்ப கம்பனியின் நடைமுறை சீராக்கம் செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் பணிநிலை விபரக் கட்டமைப்பு மற்றும் சம்பள கட்டமைப்பு பற்றிய அனைத்து விவரங்களும் அடங்கிய கடிதம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. | |
| (v.) | கம்பனியின் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு ரூ.150,000 மாதாந்த பொழுதுபோக்கு படி 2020 முதல் செலுத்தப்படுகிறது. | நிர்வாக இயக்குனர்/தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு மாதாந்த கட்டணம் செலுத்துவது கம்பனியின் ஒரு தொடர்ச்சியான நடைமுறையாகும். பொழுதுபோக்கு படி உட்பட தலைமை நிறைவேற்று அதிகாரியின் ஊதியத்திற்கான அங்கிகாரம் சபையால் வழங்கப்பட்டது மற்றும் கம்பனியானது உரிய அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு முறையாகத் தொடர்பு கொண்டது. | கம்பனியின் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரியினுடைய இரு முரண்பட்ட வகிபாகங்கள் ஒரு தனிநபரால் நடத்தப்பட்டது. ஆகவே, அவர்களது சொந்த நன்மைகளைத் தீர்மானிப்பதில் ஒரு கருத்து வேற்றுமை ஏற்பட்டது. எனவே, பொது முயற்சிகள் திணைக்களத்துடனான வெறும் தகவல் தொடர்பு போதுமானதாக இல்லை மற்றும் பொது திறைசேரியின் முன் அங்கிகாரம் அவசியமாகும். |
| (vi.) | லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட் (LGLL) இன் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரியாகவும் இருக்கும் கம்பனியின் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரிக்கான மாதச் சம்பளம் ரூபா. 575,000 ஆனது LGLL இன் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரியின் சம்பளத்தில் 50 சதவீதமாக 2020 முதல் செலுத்தப்படுகிறது. | யூலை 31, 2020 திகதியிட்ட லிற்றோ காஸ் ரேமினல் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் இன் தலைமை நிர்வாக அதிகாரியின் சம்பளத்திற்கான ஒப்புதல்- லிற்றோ காஸ் லங்கா லிமிட்டட் இன் அதே ஊதியங்கள் இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு, தலைமை நிறைவேற்று அதிகாரியாக அடிப்படை சம்பளத்தில் 50% மட்டுமே வரையப்பட்டது. | கம்பனியின் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரியினுடைய இரு முரண்பட்ட வகிபாகங்கள் ஒரு தனிநபரால் நடத்தப்பட்டது. ஆகவே, அவர்களது சொந்த நன்மைகளைத் தீர்மானிப்பதில் ஒரு கருத்து வேற்றுமை ஏற்பட்டது. எனவே, பொது திறைசேரியின் முன் அங்கிகாரம் அவசியமாகும். |

| | | | |
|---|---|---|---|
| (b.) 2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை எண்.01/2015 மற்றும் 2016 ஒக்டோபர் 27 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை எண்.1/2015(i). | சுற்றறிக்கைகளின் படி, தலைமை நிதி அலுவலர்/தலைமைச் செயல்பாட்டு அலுவலர் மற்றும் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஏதேனும் SOE இன் HM 1-1 வகைக்கு சமமாக அல்லது அதற்கு மேல் உள்ள பதவி வகிக்கும் நபர் ஒரே ஒரு அதிகாரப்பூர்வ வாகனத்தைப் பயன்படுத்த மற்றும் மாதாந்தம் முறையே 140 மற்றும் 120 லிட்டருக்கு சமமான எரிபொருள் படிக்கு உரித்துடையவராவார் மற்றும் மேலுள்ள அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படலாம் அல்லது மாதாந்திர கொடுப்பனவாக ரூ.50,000 மற்றும் மாதாந்திர எரிபொருள் கொடுப்பனவு வரையப்படலாம்.<br>சுற்றறிக்கைக்கு முரணாக;<br><br>(i.) உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரிமையற்ற குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் அல்லது மாதாந்திர கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன.<br><br>(ii.) மாதாந்த வாகன கொடுப்பனவு ரூ. 143,000 முதல் ரூ. 300,300 வரையில் உள்ளது. இது ஆறு (06) அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த கொடுப்பனவான ரூ.50,000 ஐ விட அதிகமாகும்.<br><br>(iii.) மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு 200 லீற்றர் முதல் 320 லீற்றர் வரையில் உள்ளது. இது ஆறு (06) அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட மாதாந்த எரிபொருள் | சுற்றறிக்கையின் படி, இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் லிட்ரோ கேஸ் லிமிட்டட் துணை நிறுவனத்தின் கீழ் வருவதால் அதற்குப் பொருந்தாது.<br>தலைவர், தலைமை நிறைவேற்று அதிகாரி, இயக்குனர்கள் சபை ஆகியோருக்கான படிக் கொடுப்பனவுகள் போட்டி சந்தை விகிதங்களைக் கருத்தில் கொண்டு அந்தந்த சபையால் தீர்மானிக்கப்படும்.<br>அதன்படி, PED 01/2015க்குப் பதிலாக கம்பனியின் அமைப்பு அகவிதியின் அடிப்படையில், பொது முயற்சிகள் திணைக்களத்தின் பிரதிநிதியை உள்ளடக்கிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கார் கொள்கையைப் பின்பற்றியது. | கார் கொள்கையை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட துணைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை கருத்து வேற்றுமை அவதானிக்கப்பட்டதால் அவற்றை ஏற்க முடியாது.<br>இந்தக் கொள்கையின் கீழ் பயனாளிகளுடன் துணைக் குழுவின் உறுப்பினர்களையும் கொண்டிருந்ததால். மேலும், துணை நிறுவனங்கள் இந்த சுற்றறிக்கையில் இருந்து விலக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் இது தொடர்பான எந்த விளக்கங்களும் பொது முயற்சிகள் திணைக்களத்திடம் இருந்து பெறப்பட்டிருக்கவில்லை.<br>எனவே, முறையான வழிகாட்டுதல் மற்றும் பொது திறைசேரியின் அங்கீகாரத்துடனான சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை கடைபிடிக்க பரிந்துரைக்கப்படுகிறது.<br>சபையின் உறுப்பினராக அரசாங்கத்தின் நலனைப் பாதுகாப்பது பொது திறைசேரியின் பிரதிநிதியின் கடமையாகும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவான 140 அல்லது 120 லீற்றர் ஐ விட அதிகமாகும். | | |
| (c.) 2015 மே 25 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை எண்.01/2015 மற்றும் 2020 ஜனவரி 27 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை எண்.01/2020. | (i.) PED 01/2015 சுற்றறிக்கையின் படி, ஒரு அதிகாரி ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை வகித்தால், அவர் தனது முக்கியமான பதவிக்காக குறித்துரைக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவை மட்டுமே பெறுவதற்கு உரிமை உள்ளவராவார். எவ்வாறாயினும், இரு கம்பனிகளின் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரியாக இருக்கும் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரி இரு கம்பனிகளுக்குமான மாதாந்த வாகனப் படியாக ரூ.443,300 பெறுகின்றனர் மற்றும் இந்தத் தொகையானது 27 ஜனவரி 2020 திகதியிட்ட PED 01/2020 ஆல் அனுமதிக்கப்பட்ட மாதாந்த கொடுப்பனவான ரூ.50,000 ஐ விட அதிகமாக உள்ளது.<br><br>(ii.) PED 01/2020 ஆல் அனுமதிக்கப்பட்ட 150 லிட்டர் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவை விட கூடுதலான 500 லிட்டர் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு கம்பனியின் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு செலுத்தப்படுகிறது. | 21 பெப்ரவரி 2020 மற்றும் 31 யூலை 2020 ஆகிய திகதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் அமைப்பு அகவிதி மற்றும் அமைப்பு புறவிதி இன் உருப்படி எண் 76,77,78,83 இன் படி, தலைவர், நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத இயக்குனர்கள் மற்றும் அவதானிப்பாளர்களுக்குரிய படிக் கொடுப்பனவுகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல் போன்றவை இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | கம்பனியின் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி ஆகிய இரு முரண்பட்ட பாத்திரங்கள் ஒரு தனிநபரால் நடத்தப்படும். மேலும், தலைவர், நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத இயக்குனர்கள் மற்றும் அவதானிப்பாளர்களுக்குரிய படிக் கொடுப்பனவுகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குதல் போன்றவை இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.<br>ஆகவே, அவர்களது சொந்த நன்மைகளைத் தீர்மானிப்பதில் ஒரு கருத்து வேற்றுமை ஏற்பட்டது. எனவே, சபையின் உறுப்பினர்களால் பெறப்படும் ஏதேனும் நன்மைகளுக்கு பொது திறைசேரியின் முன் அங்கிகாரம் அவசியமாகும். |

| | | | |
|---|---|---|---|
| | (iii.) PED 01/2015 மற்றும் PED 01/2020 க்கு மாறாக, கம்பனியின் தலைவர்/தலைமை நிறைவேற்று அதிகாரிக்கு ரூ.50,000 மாதாந்த ஓட்டுநர் கொடுப்பனவு செலுத்தப்படுகிறது.<br><br>(iv.) PED 01/2020 சுற்றறிக்கையின்படி, நிறைவேற்று அல்லாத இயக்குனருக்கான (NED) மொத்த அமர்வுக்கான கொடுப்பனவானது மாதாந்தம் ரூ.25,000 க்கு கூடாமல் இருக்க வேண்டும். மற்றும் அவர் அமர்வுக்கான கொடுப்பனவிற்கு மட்டுமே உரித்துடையவராவார். சுற்றறிக்கைக்கு முரணாக;<br><br>• சபைக் கூட்டத்திற்கு ரூ.25,000 வீதம் அமர்வுக் கொடுப்பனவு மூன்று நிறைவேற்று அல்லாத இயக்குனர்களுக்கு (NED) கொடுப்பனவு செய்யப்பட்டது.<br><br>• மாதாந்த வாகனக் கொடுப்பனவு ரூ.100,000 மூன்று நிறைவேற்று அல்லாத இயக்குனர்களுக்கு (NED) கொடுப்பனவு செய்யப்பட்டது. | | |
| (d) 2018 டிசம்பர் 07 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை எண். PED 03/2018. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி ஒரு ஊழியருக்கான வெகுமதி தொகையான ரூ.13,500 க்கு முரணாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் கம்பனியின் ஒரு ஊழியருக்கு ரூ.60,000 வெகுமதி செலுத்தப்பட்டது. | CBA அல்லாத ஊழியர்களின் வருடாந்த செயல்திறன் அடிப்படையிலான வெகுமதி தனிப்பட்ட செயல்திறன் மற்றும் கம்பனியின் செயல்திறன் ஆகியவற்றின் தொடர்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. | கம்பனியானது சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை கடைபிடிக்க வேண்டும். ஏதேனும் விலகல்கள் தேவைப்பட்டால், பொதுத் திறைசேரியின் அங்கிகாரம் அவசியமாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வெகுமதி செலுத்தும் மாதங்களின் எண்ணிக்கையானது, CBA ஊழியரின் கொடுப்பனவு மற்றும் எங்கள் தாய் நிறுவனம் செலுத்திய மாதங்களின் எண்ணிக்கை ஆகியவற்றுடன் இணங்க வேண்டும். (எஸ்.எல்.ஐ.சி) வெகுமதி திட்டங்களானது சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஊதியக் குழுவால் பரிந்துரைக்கப்படும். | |
| (e) | 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை எண். PED/12 இன் பிரிவு 8.3.3(C) . | பொது திறைசேரியின் அங்கிகாரத்தைப் பெறாமல் கம்பனியின் வெகுமதி திட்டத்தின் கீழ் கம்பனியின் ஊழியர்களுக்கு மீளாய்விற்குரிய ஆண்டில் ரூ.7.26 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 200 க்கும் மேற்பட்ட மனிதவளத் தொழிலாளர்களால் கையாளப்படும் நிரப்புதல் செயல்பாடு, சிலிண்டர் பராமரிப்பு செயல்பாடுகள் மற்றும் போக்குவரத்து போன்ற பல சேவைகள் உள்ளன, மற்றும் ஊதியக் குழு மூலம் பரிந்துரை பெறப்பட்டது அத்துடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான ஊதியக் குழு ஊடாக தற்போதைய ஊதியக் கட்டமைப்பை மதிப்பாய்வு செய்ய சபை அங்கிகாரம் வழங்கப்பட்டது. | கம்பனியானது சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை கடைபிடிக்க வேண்டும். ஏதேனும் விலகல்கள் தேவைப்பட்டால், பொதுத் திறைசேரியின் அங்கிகாரம் அவசியமாகும். |
| (f.) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம். | சொல்லப்பட்ட ஏற்பாடுகளின் படி, அந்த கம்பனி உட்பட அரசுக்கு சொந்தமான கம்பனிகளை கணக்காய்வு செய்ய நாட்டின் உச்ச சட்டத்தால் கணக்காய்வாளர் தலைமையதிபதி நியமிக்கப்பட்டுள்ளார். எவ்வாறாயினும், மேற்கூறிய விதிகளுக்கு மாறாக 2020 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பொது | அரசியலமைப்பு, குறிப்பாக 154வது உறுப்புரை, கணக்காய்வுப் பணிகளுக்காக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் வரம்பிற்குள் வரும் நிறுவனங்களை தெளிவாகக் குறிப்பிடுகிறது. அரசியலமைப்பின் சமீபத்திய 20 வது | கம்பனியின் வணிகத்தைத் தொடரும் போது நாட்டின் சட்டத்தை பின்பற்றுவதையும் ஒருமைப்பாட்டைப் பேணுவதையும் சபை உறுதி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையில் ஒரு கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருந்தார் மற்றும் அவர்கள் 2020 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வினை மேற்கொண்டிருந்தனர். | திருத்தத்தில் 154 வது உறுப்புரை குறிப்பாக அதன் சிங்கள உரை திருத்தப்பட்டது, இதன் மூலம் நிலவிய தெளிவின்மை நீக்கப்பட்டது. எவ்வாறாயினும், LGLL & LGTLL ஆகியவை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கீழ் வருகிறதா என்பதைக் உறுதிப்படுத்துவது சட்டத்தின் கேள்வியாகும், இது ஒரு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும், ஆனால் கம்பனி அல்லது தலைமை சட்ட அதிகாரியால் அல்ல. மேற்கூறிய நடவடிக்கைகள் குறித்த அறிவிப்புகளை வெளியிட்டு மற்றும் இரு கம்பனிகளின் விவகாரங்களையும் கணக்காய்வு செய்வதிலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதியை தடுக்கும் இடைக்கால உத்தரவுகளை வழங்கியதன் மூலம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் மேற்படி நிலைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | |
| (g.)08 ஆகஸ்ட் 2014 அன்று சபையால் நிறைவேற்றப்பட்ட 2014 இன் சுற்றறிக்கைத் தீர்மானம் எண்.04 | தீர்மானத்தின்படி, 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க காப்புறுதி தொழில்த்துறை ஒழுங்குமுறைப்படுத்தல் (திருத்தப்பட்டது) சட்டத்தின் பிரகாரம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் லிமிடெட்டைப் பிரிக்கும் நோக்கத்திற்காக ஸ்ரீலங்கா இன்வெஸ்ட்மென்ட் ஹோல்டிங்ஸ் லிமிடெட் (SLIHL) க்கு வட்டியில்லா முற்பணம் ரூ.100 மில்லியன் | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | சபையின் தீர்மானத்தின் படி கம்பனி SLIHL இலிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

மாற்றப்பட்டிருந்தது. இந்தத் தொகையானது பணமாகவோ அல்லது பங்கிலாப தீர்ப்பனவு மூலமாகவோ 31 ஆகஸ்ட் 2015 அன்று அல்லது அதற்கு முன் SLIHL ஆல் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். SLIHL ஒருங்கிணைப்பதில், கம்பனியின் அப்போதைய தலைவர் மற்றும் முகாமைத்துவப் இயக்குனர், ஆரம்ப பங்குதாரர்களாக தலா ஒரு சாதாரண பங்கைக் கொண்டவர்களாக அடையாளம் காணப்பட்டனர், மேற்கூறிய இரண்டு ஆரம்ப பங்குகளும், புரிதலின் அடிப்படையில் திறைசேரி செயலாளருக்கு நடைமுறை சாத்தியத்தில் முடிந்தவரை விரைவில் மாற்றப்படும். எவ்வாறாயினும், இந்த முற்பணம் இன்றுவரை SLIHL ஆல் திருப்பிச் செலுத்தப்பட்டிருக்கவில்லை மற்றும் அத்தகைய முற்பணத்தைத் தீர்ப்பதில் கம்பனிக்கும் SLIHL க்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்படவில்லை. மேலும், கம்பனிகளின் பதிவாளரின் பதிவுகளின் படி, SLIHL இன் மொத்த இரண்டு பங்குகள் இன்னும் பொது திறைசேரிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 1,080,146,112 இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 1,019,353,911 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா.60,792,201 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்திலிருந்தான வருமானமானது ரூபா. 108,025,331 ஆல் அதிகரித்தமையும், விற்பனைக் கிரயமானது ரூபா. 11,101,122 ஆல் குறைவடைந்தமையும் மற்றும் நிர்வாகச் செலவினங்கள் ரூபா. 24,368,560 ஆல் குறைவடைந்தமையும் முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

முந்தைய இரண்டு (02) ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவீன உருப்படிகளின் சதவீதத்துடனான அதிகரிப்பு அல்லது குறைவின் பகுப்பாய்வு பின்வருமாறு.

| 31 டிசம்பர் இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | தொகை (ரூபா.) | | | சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2021 | 2019 | 2020 | 2021 |
| வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்திலிருந்தான வருமானம் | 2,064,442,430 | 1,508,188,378 | 1,616,213,709 | 1% | -27% | 7% |
| விற்பனைக் கிரயம் | (316,171,885) | (327,478,463) | (316,377,341) | -3% | 4% | -3% |
| (நட்டம்) / செயற்பாட்டிலிருந்தான இலாபம் | 1,748,270,545 | 918,058,416 | 924,952,912 | 3% | -37% | 1% |
| நிதி வருமானம் | 702,332,213 | 517,548,850 | 304,004,575 | 14% | -26% | -41% |
| நிதிச் செலவீனம் | (134,897,235) | (83,243,598) | (28,091,984) | - | -38% | -66% |

## 2.3 விகித பகுப்பாய்வு

முந்தைய இரண்டு (02) ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது முக்கிய விகிதங்கள் பின்வருமாறு.

| விகிதம் | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|
| தேறிய இலாப விகிதம் | 104.22% | 95.19% | 76.04% |
| மூலதனத்தின் மீதான வருவாய் (ROCE) | 18.47% | 12.27% | 9.60% |
| உரிமை மீதான திரும்பல் விகிதம் | 14.77% | 9.61% | 8.99% |
| சொத்து புரள்வு விகிதம் | 43.92% | 23.43% | 15.27% |
| சொத்து மீதான திரும்பல் விகிதம் | 17.67% | 11.83% | 9.18% |
| நடைமுறை விகிதம் | 14.21 | 13.15 | 4.81 |
| விரைவு விகிதம் | 14.19 | 13.12 | 4.80 |
| நிதி அந்நியச் செலாவணி | 1.24 | 1.14 | 1.11 |
| கடன் சொத்து விகிதம் | 0.20 | 0.13 | 0.10 |
| கடன் உரிமை விகிதம் | 0.24 | 0.14 | 0.11 |
| நடைமுறை மொத்த பொறுப்பு விகிதம் | 0.22 | 0.28 | 0.43 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (a) சட்டக் கட்டணம் - 2020 இற்கான கம்பனியின் கணக்காய்விலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பதில் அமர்த்தல்<br><br>(i.) 2020 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்விலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பதில் அமர்த்துதல் தொடர்பான உத்தேச மேன்முறையீட்டு நீதிமன்ற ரிட் விண்ணப்பத்திற்காக தொழில்முறை சேவைகள் பெறப்பட்டிருந்தன. அதன்படி, 05 பெப்ரவரி 2021 அன்று சட்ட ஆலோசகர்களுக்கு கம்பனியால் ரூ.2.6 மில்லியன் செலுத்தப்பட்டது. | LGTLL உறுப்புரைகளின் 19 வது உறுப்புரையின் படி, இலங்கையிலோ அல்லது வேறு இடங்களிலோ முகவர்களை நியமிக்க அல்லது வேலையில் ஈடுபடுத்த, பராமரிக்க பொருத்தமானதாக கருதப்படும் எந்தவொரு விகிதத்திலும் முறையிலும் ஊதியம் வழங்குவதற்கும் பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதன்படி, கௌரவ தலைமைச் சட்ட அதிகாரி தனியார் கம்பனிகளுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்காத காரணத்தினால், இயக்குனர் சபை மேற்படி ஜனாதிபதி ஆலோசகரின் சேவையை நாடியுள்ளது<br><br>பங்குதாரர்களின் நலன் மற்றும் உரிமையைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையாக, கம்பனி சட்டத்தின் விதிகளின் பார்வையில், தங்களுக்கு விருப்பமான கணக்காய்வாளரை நியமிப்பதற்கு, PWC இன் நியமனத்திற்கு கணக்காய்வாளர் தலைமையதி ஆட்சேபனை தெரிவிக்கும் பட்சத்தில், கம்பனி தகுந்த ஆலோசகரின் சேவையை நாடியது.<br><br>எனவே, அதே சட்ட ஆலோசகருக்கும் அவரது கனிஷ்டர்களுக்கும் கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்கும், ஆலோசனைகள் செய்வதற்கும், மூலோபாய மற்றும் சட்ட ஆலோசனைக்கான ஆவணங்களைப் பார்ப்பதற்கும், மனு மற்றும் பிரமாணப் பத்திரத்தை வரைவதற்கும், தீர்ப்பதற்கும் அந்தத் தொகை செலுத்தப்பட்டிருக்கிறது. | கம்பனியின் விவகாரங்களை மேற்கொள்ளும் போது, சபை நாட்டின் சட்டத்தை கடைபிடிக்க வேண்டும். சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கு ஏதேனும் தேவை இருப்பின், இலங்கையின் தேசிய பெறுகை முகவரால் வெளியிடப்பட்ட ஆகஸ்ட் 2007 ஆலோசகர்களின் வழிகாட்டுதல்கள் தேர்வு மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை கம்பனி பின்பற்ற வேண்டும். மேலும், கம்பனி எப்பொழுதும் நேர்மையைப் பேண வேண்டும் மற்றும் எதிர்காலத்தில் இது நிகழாமல் தடுக்க வேண்டும். |
| (ii.) சட்ட ஆலோசனைகளைப் பெற்ற பிறகு, கம்பனி 22 மே 2021 அன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அரசியலமைப்பு அதிகார வரம்பிற்குள் வரும் கம்பனியின் | 20 யூலை 2021 திகதியிட்ட கடிதத்தின் மூலம் முக்கிய பங்குதாரர், LGTLL இன் இயக்குனர் சபைக்கு அறிவுறுத்தியுள்ளார். இயக்குனர் சபை 22/7/2021 அன்று நடைபெற்ற சபைக் கூட்டத்தில், கம்பனியின் நிதியை ஆய்வு செய்ய கணக்காய்வாளர் தலைமையதிபதியை நியமிக்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்தனர். LGTLL க்கு கணக்காய்வாளர் தலைமையதிபதியை நியமிப்பது தொடர்பாக 20/7/2021 திகதியிட்ட கடிதத்தின் மூலம் முக்கிய பங்குதாரரான LGTLL ஒரே பங்குதாரரால் 23 ஏப்ரல் 2021 அன்று | |

| | | |
|---|---|---|
| | முடிவை சவால் செய்து ரிட் விண்ணப்பங்களைத் தாக்கல் செய்தது. எவ்வாறாயினும், 30 யூலை 2021 திகதியிட்ட சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் இந்த வழக்கு கம்பனியால் திரும்பப் பெறப்பட்டது. இந்த வழக்கு தொடர்பான சட்டக் கட்டணம் ரூ.8.125 மில்லியன் யூன் 2021 இல் கம்பனியால் செலுத்தப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்ட பினாமிகள் திரும்பப் பெறப்பட்டதைக் கருத்தில் கொண்டு மட்டுமே, மேல்முறையீட்டு நீதிமன்ற ரிட் விண்ணப்ப எண்கள்: CA Writ 286/2021 & CA Writ 287/2021 ஐத் திரும்பப் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது, இதில் நீதிமன்றம் 21 செப்டம்பர் 2021 ஆம் தேதி வரை LGTLL கம்பனியை கணக்காய்வு செய்வதைத் தடுக்கும் நிவாரணத்துடன் பதிலளித்தவர்கள் மீது முறையான அறிவிப்பை வெளியிட்டது. எனவே, மேற்கூறிய இடைக்கால உத்தரவை நீதிமன்றத்தால் ரத்து செய்த பின்னரே அல்லது இந்த வழக்குகளை மீளப் பெற்ற பின்னரே கணக்காய்வாளர் தலைமையதிபதி தனது உத்தியோகபூர்வ பணிகளைச் செய்யத் தொடங்க முடியும். மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி நடவடிக்கைகள் குறித்த அறிவிப்புகளை வெளியிட்டது மற்றும் கம்பனியின் விவகாரங்களை கணக்காய்வு செய்வதிலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதியை தடுக்கும் இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. |
| (iii.) | மேற்படி விடயம் தொடர்பாக ஏற்பட்ட மொத்த செலவுகள் ரூ.10.725 மில்லியன் பொருளாதாரமற்ற செலவீனமாக அவதானிக்கப்பட்டது. | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரபல சட்டத்தரணிகளான திரு.சஞ்சீவ ஜயவர்தன ஜனாதிபதி சட்டத்தரணி மற்றும் திரு.ரொமேஷ் டி சில்வாவின் ஜனாதிபதி சட்டத்தரணி ஆகியோரால் கம்பனி பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது இந்த விடயம் தொடர்பில் அவர்கள் தமது தனித்துவ கருத்தை வெளிப்படுத்தியிருந்தனர். சட்டத்தரணி-வாடிக்கையாளர் உறவைப் பேணுகின்ற ஆங்கில சட்ட முறைமையின் மரபுகள் மணல் நடைமுறைகளால் இலங்கையின் சட்ட முறைமை வளப்படுத்தப்பட்டுள்ளது. கொடுப்பனவுகளைச் செலுத்துதல் மற்றும் பிற தொடர்புடைய விடயங்களின் இந்த பகுதியில் கட்டமைப்பு அல்லது பொருந்தக்கூடிய விதி எதுவும் இல்லை. அதன்படி, நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பவரின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சிறந்த மற்றும் திறமையான ஆலோசகருக்கு கட்டணம் செலுத்தும் போது வாடிக்கையாளருக்கு பேரம் பேசும் சக்தி இல்லை. கூறப்பட்ட தொகையானது பொருளாதாரமற்ற செலவினமா என்பதை உறுதி செய்வதற்காக, அதே அல்லது ஒத்த ஆலோசகர்களின் சட்டக் கட்டணங்கள் குறித்த சந்தை ஆய்வை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. |
| (iv.) | கம்பனி பாரிய செலவினங்களை ஏற்படுத்தும் வகையில் சட்ட | தலைமைச் சட்ட அதிகாரி ஒரு கருத்தை மட்டுமே கூறியுள்ளார். தலைமைச் சட்ட அதிகாரியின் கருத்து நாட்டின் சட்டமாக கருதப்படவில்லை. நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில், |

| | |
|---|---|
| நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டதுடன், கணக்காய்வாளர் தலைமையதிபதி கணக்காய்வை மேற்கொள்வதற்கு எவ்வித சட்டத் தடையும் இல்லை என தலைமை சட்டமா அதிகாரி கூட தனது கருத்தை தெரிவித்திருந்தார். | அரசியலமைப்பில் உள்ள விதிகள், குறிப்பாக அதில் உள்ள உறுப்புரை 154 மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டம் ஆகியவற்றின் பொருந்தக்கூடிய தன்மை குறித்து சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணியின் கருத்தை கம்பனி பெற்றிருக்கிறது. இதன் விளைவாக, கூறிய கருத்து தொடர்பாக இயக்குனர்கள் சபை கவனம் எடுத்திருந்தது மற்றும் கூறிய கருத்துக்கு இணங்க, மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணை எண் CA ரிட் 286/2021 & 287/2021 நடவடிக்கையானது LGTLL ஆல் நிறுவப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்படி நடவடிக்கைகள் குறித்த அறிவிப்புகளை வெளியிட்டது மற்றும் இரண்டு கம்பனியின் விவகாரங்களை கணக்காய்வு செய்வதிலிருந்து கணக்காய்வாளர் தலைமையதிபதியை தடுக்கும் இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. |

## 3.7 செயலற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம் , பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (a.) "லிட்ரோ ஆக்சிஜன்" என்ற பெயரில் புதிய தயாரிப்பு வகையை நிறுவுவதற்கும், கெரவலப்பிட்டியில் சுமார் 22 ஏக்கர் நிலம் மற்றும் கட்டிடத்தை SLRDC இலிருந்து 50 ஆண்டுகளுக்கு அரசு மதிப்பீட்டின் அடிப்படையில் ரூ. 500 மில்லியன் முற்பணத்தை செலுத்துவதன் மூலம் குத்தகைக்கு எடுக்கவும் மற்றும் இந்த நிலத்தை ஆக்ஸிஜன் நிரப்பு நிலையத்தை நிர்மாணிக்க மற்றும்/ அல்லது கூடுதல் எல்பிஜி செயல்பாடுகள் மற்றும் சேமிப்பு விரிவாக்க திட்டமாக அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய நடவடிக்கைகளாக பயன்படுத்தவும் 24 மே 2021 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் சபை அங்கிகாரம் அளித்துள்ளது. அதன்படி, 2021 மே 31 அன்று நிலத்திற்கான முற்பணமாக ரூ.500 மில்லியன் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், மேற்படி காணியில் ஆக்ஸிஜன் நிரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை மற்றும் மேற்படி காணியைப் பயன்படுத்துவதற்கான எதிர்காலத் திட்டம் இன்னும் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்தால் பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | .கம்பனி இந்த சொத்தை உத்தேசித்த நோக்கத்திற்காக அல்லது தொடர்புடைய அதிகாரிகளின் ஒப்புதலுடன் வேறு ஏதேனும் பொருத்தமான நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். |
| (b.) கம்பனி 20 நவம்பர் 2013 அன்று இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் ஹம்பாந்தோட்டை செயற்பாட்டு மையத்தில் LPG ஐ இறக்குமதி செய்தல், சேமித்தல், கையாளுதல் மற்றும் விநியோகம் செய்யும் நோக்கத்திற்காக 10 வருட காலத்திற்கு குத்தகை ஒப்பந்தம் ஒன்றை | 2017ல் சிலிண்டர் நிரப்பும் ஆலையை அமைப்பதற்கான முயற்சிகள் மீண்டும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் | பொது மக்களுக்கு சேவை செய்ய கம்பனியின் நோக்கத்திற்காக இந்த சொத்தை பயன்படுத்த கம்பனி தேவையான |

மேற்கொண்டிருந்தது. பின்னர் இது ஹம்பாந்தோட்டை இன்ரநஷனல் போர்ட் குரூப் (பிரைவேட்) லிமிடெட் உடன் 08 டிசம்பர் 2017 அன்று புதுப்பிக்கப்பட்டிருந்தது. 8 ஆண்டுகளுக்கான மொத்த குத்தகை வாடகை ரூ.668.55 மில்லியன் (வரி உட்பட) செலுத்தப்பட்டிருந்தது மற்றும் மீதமுள்ள இரண்டு ஆண்டுகளுக்கு குத்தகை வாடகையாக மொத்தமாக ரூ.233.84 மில்லியன் (வரி தவிர்த்து) செலுத்த வேண்டும். 20 நவம்பர் 2013 முதல் 31 டிசம்பர் 2021 வரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு 10,075 MT, LPG மொத்த அளவுடன் 6 இறக்குமதிகள் மட்டுமே வந்தடைந்தது அவதானிக்கப்பட்டது. எனவே, குறிப்பிடத்தக்க தொகை குத்தகை வாடகையாக செலுத்தப்பட்டாலும் கூட மேற்குறிப்பிட்ட வசதி கம்பனியால் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. குறைந்த மாதாந்த ஒப்பந்த விலைகளின் நிகழ்வுகளில் (CP) செலவு நலனைப் பெறுவதற்கு 2,700 மெட்ரிக் டன் சேமிப்புத் திறன் கொண்ட மேற்கூறிய வசதி பயன்படுத்தப்படவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் உரிமை மாற்றக் கூடிய சாத்தியம் காரணமாக ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

இருப்பினும், இந்த வசதியை முழு அளவில் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், நிரப்பு ஆலை அமைக்கும் பணியை விரைவுபடுத்தவும், வணிக ரீதியாக செயல்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.